**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. 82 /2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராமசாமி | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | பிச்சை | Defence | |
| Village | மேலதெரு, புங்கனூர். | Taluk | சீர்காழி. |
| Calling | தெரு | Religion | |
| Age | 68/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **02.11.2023**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரயும். கடந்த 14.3.2022 தேதி மாலை 7.00 மணியளவில் எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. அன்றைய தினம் வைத்திஸ்வரன்கோயில் யில் வேலை முடித்து விட்டு நாகப்பட்டினம் செல்வதாக என்னிடம் போன் முலம் தகவல் சொன்னார். வைத்திஸ்வரன்கோயில் உள்ள துர்க்கையம்மன் கோயில் அருகே சென்ற போது XL என்ற இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளனாதாக தகவல் கேள்வி பட்டு நான் சம்பவ இடம் சென்றேன். அங்கிருந்து எனது மகனை வைத்திஸ்வரன்கோயில் அரசு மருத்துவமனை அழைத்து சென்று மேல் சிகிச்சைகாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றாதாக தகவல் அறிந்து நான் மயிலாடுதுறை மருத்துவமனை சென்று எனது மகனை பார்தேன். எனது மகனுக்கு கால் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்ப்பட்டு இருந்தது. அங்கிருந்து மேல்சிகிச்சைகாக திருவாருர் அழைத்து சென்ற போது அவர் இறந்து விட்டார். திருவாருர் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை முடித்து எனது மகனின் பிரேதத்தை திரும்ப பெற்று கொண்டுடோம். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும் அந்த புகார் மனு **அ.சா.ஆ .1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை ஆஜர்யின்மைகாக மனு செய்து அனுமதிக்கபடுகிறது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் அ.சா.ஆ 1 னை குறுக்கு விசாரணை செய்யாதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. 82 /2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கார்த்திக் | Prosecution | P.W-2, L.W-3 |
| Father Name | ஜெயராமன் | Defence | |
| Village | சுள்ளான்தெரு, பெருந்தோட்டம். | Taluk தரங்காம்பாடி. | |
| Calling | தெரு | Religion | |
| Age | 33/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **02.11.2023**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்த மோகன்தாஸ் எனது மனைவி உடன் பிறந்த சகோதாரர் அ.சா.1 எனது மாமனார். கடந்த 14.3.2022 தேதி காலை 8.00 மணியளவில் மோகன்தாஸ் வைத்திஸ்வரன்கோயில் மின்சார துறையில் ஒப்பந்த பணியாளராக வேலை சென்று இருந்தார். அன்றைய தினம் எனது மாமானர் ஊரில் திருவிழா நடந்தது. நான் திருவிழாவிற்கு சென்று இருந்தேன் அங்கு இருந்த போது அன்றைய தினம் வைத்திஸ்வரன்கோயில் யில் வேலை முடித்து விட்டு நாகப்பட்டினம் செல்வதாக எனது மாமானாரிடம் போன் முலம் தகவல் சொன்னவர். மாலை 8.00 மணிமுதல் 9.00 குள் ராமச்சந்திரன் இருசக்கர வாகனத்தில் ராமச்சந்திரன் வாகனத்தை ஒட்ட மோகன்தாஸ் பின்னால் அமர்ந்து வைத்திஸ்வரன்கோயில் உள்ள துர்க்கையம்மன் கோயில் அருகே வந்த போது XL என்ற இருசக்கர வாகனத்தில் இருந்து தவறி விழுந்து விபத்துக்குள்ளனாதாக தகவல் கேள்வி பட்டு நான் சம்பவ இடம் சென்றேன். அங்கிருந்து எனது மைத்துனரரை சிகிச்சைக்காக துக்கி கொண்டு வைத்திஸ்வரன்கோயில் அரசு மருத்துவமனை அழைத்து சென்று மேல் சிகிச்சைகாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது மைத்துனர்க்கு கால் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்ப்பட்டு இருந்தது. அங்கிருந்து மேல்சிகிச்சைகாக திருவாருர் அழைத்து சென்ற போது அவர் இறந்து விட்டார். திருவாருர் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத

பரிசோதனை முடித்து எனது மைத்துனர்யின் பிரேதத்தை திரும்ப பெற்று கொண்டுடோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை ஆஜர்யின்மைகாக மனு செய்து அனுமதிக்கபடுகிறது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் அ.சா.1 னை குறுக்கு விசாரணை செய்யதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. 82 /2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அழகுராஜா | Prosecution | P.W-3, L.W-5 |
| Father Name | பெருமாள் | Defence | |
| Village | மேலதெரு, புங்கனூர். | Taluk | சீர்காழி. |
| Calling | | Religion | |
| Age | 50/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **02.11.2023**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்த மோகன்தாஸ் எனது உறவினர் அ.சா.1 எனது மாமா. அ.சா.1 எனது உறவினர். தேதி மாதம் வருடம் நினைவில்லை. வைத்திஸ்வரன்கோயில் யில் வேலை முடித்து விட்டு நான் வந்து கொண்டிருந்து போது விபத்து நடந்தாக கேள்விபட்டு அங்கு சென்று பார்தேன், அ.சா.1 ன் மகன் மோகன்தாஸ் விபத்துக்குள்ளாகி கிடந்தார். மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துவிட்டு நான் பேருந்தில் ஏறி திருவாருர் அரசு மருத்துவமனை சென்றேன். மோகன்தாஸ் பிரேதத்தின் மீது வைத்திஸ்வரன்கோயில் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள் நாங்கள் உடன் இருந்தோம். திருவாருர் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை முடித்து மோகன்தாஸ் பிரேதத்தை திரும்ப பெற்று கொண்டுடோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை ஆஜர்யின்மைகாக மனு செய்து அனுமதிக்கபடுகிறது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் அ.சா.1 னை குறுக்கு விசாரணை செய்யதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**